டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.12.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 147 - Madurai | Online Edition

# உணவு பதனப்படுத்தும் தொழில்களில் சுய உதவிக் குழுக்களுக்கு அரசு மானியம்

புது தில்லி, டிச.13

உணவு பதனப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம் தனது திட்டங்கள் மூலம் உணவு பதனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய, பிரதமரின் உணவு பதனப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ், சுய உதவிக்குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ.40,000/- வரை ஆரம்ப மூலதனத்திற்கு அமைச்சகம் மானியம் வழங்குகிறது. தனிநபர் சுய உதவிக் குழு உறுப்பினர் திட்ட மதிப்பீட்டில் 35% கடன் இணைக்கப்பட்ட மானியத்தை அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை உணவு பதனப்படுத்தும் நிறுவனத்தின் ஒரு அலகாகப் பெறலாம். சுய உதவிக் குழுக்கள் பிரதமரின் உழவர் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான துணைத் திட்டங்களின் கீழ் உதவி பெறவும் தகுதி பெற்றுள்ளனர்.

பிரதமரின் வனப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் ஆதார மூலதனம், அந்தந்த மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்கள் மற்றும் மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 3,10,121 சுய உதவிக் குழு உறுப்பினர் களுக்கு உதவுவதற்காக ரூ.1032.31 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில், 2,47,984 கிராமப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.810.89 கோடியும், நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.221.42 கோடியும் 31.10.24 வரை அனுமதிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த மத்திய உணவு பதனப்படுத்தும் தொழில்துறை இணையமைச்சர் ரவ்னீத் சிங் பிட்டு இத்தகவலை தெரிவித்தார்.

# பயிர் விளைச்சல் போட்டியில் வெல்லும் விவசாயிகளுக்கு பரிசு

விருதுநகர், டிச.13

தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை விவசாயிகளுக்கு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக பயிர் விளைச்சல் போட்டி மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இப்போட்டியில் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பங்கு பெறலாம். குறைந்தது 50 சென்டில் பயிர் சாகுபடி பரப்பு இருக்க வேண்டும். இவ்வகையில் நடப்பு ஆண்டில் (2024-25) வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு பரிசு வழங்கும் திட்டத்தில் கம்பு, தினை, குதிரைவாலி, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, எள் மற்றும் கரும்பு போன்ற பயிர்களில் மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படுகிறது. மேலும், செம்மை நெல் சாகுபடி முறையிலும், பாரம்பரிய நெல் சாகுபடி முறையிலும் மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் நெல் (இறவை), கம்பு மற்றும் பருத்தி பயிர்களில் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படுகிறது.

## செம்மை நெல் சாகுபடி

மாநில அளவில் நடத்தப்படும் செம்மை நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டிக்கு பதிவு கட்டணம் ரூ.150/-. இப்போட்டிக் கான கடைசி அறுவடை தேதி 15.4.25 ஆகும். மேலும், இப்போட்டியில் வெற்றி பெறும் விவசாயிக்கு பரிசு தொகை ரூ.5,00,000/- ஆகும்.

## பாரம்பரிய நெல் சாகுபடி

மாநில அளவில் நடத்தப்படும் பாரம்பரிய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டிக்கு பதிவு கட்டணம் ரூ.100/-. இப்போட்டிக் கான கடைசி அறுவடை தேதி 15.3.25 ஆகும். மேலும், இப்போட்டியில் வெற்றி பெறும் விவசாயிகளுக்கு முதல் பரிசு ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசு ரூ.75,000/- மற்றும் மூன்றாம் பரிசு ரூ.50,000/- ஆகும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

## மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி

மாநில அளவில் நடத்தப்படும் இதர பயிர்களுக்கான கம்பு, தினை, குதிரைவாலி, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, எள் மற்றும் கரும்பு பயிர் விளைச்சல் போட்டிக்கு பதிவு கட்டணம் ரூ.150/- இப்போட்டிக்கான கடைசி அறுவடை தேதி 15.3.25 ஆகும். மேலும், இப்போட்டியில் வெற்றி பெறும் விவசாயி களுக்கு அனைத்து பயிர்களுக்கும் முதல் பரிசு ரூ.2,50,000/, இரண்டாம் பரிசு ரூ.1,50,000/- மற்றும் மூன்றாம் பரிசு ரூ.1,00,000/- ஆகும்.

## மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி

மேலும் மாவட்ட அளவிலான நெல் (இறவை), கம்பு மற்றும் பருத்தி பயிர் விளைச்சல் போட்டிக்கு பதிவு கட்டணம் ரூ.100/- இப்போட்டிக்கான கடைசி அறுவடை தேதி 15.3.25 ஆகும்.




மேலும், இப்போட்டியில் வெற்றி பெறும் விவசாயிகளுக்கு அனைத்து பயிர்களுக்கும் முதல் பரிசு ரூ.10,000/- மற்றும் இரண்டாம் பரிசு ரூ.5,000/- ஆகும்.

விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக வேளாண்மை - உழவர் நலத்துறை மூலமாக மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு குடியரசு தின விழாவில் மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் அதிக விளைச்சல் பெற்று போட்டியில் வெல்லும் விவசாயிகள் கௌரவிக்கப் படுவார்கள்.

எனவே அனைத்து விவசாயிகளும் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து போட்டியில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு விருதுநகர், வேளாண்மை இணை இயக்குநர் க.விஜயா கேட்டுக்கொண்டுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# உயிர்ம வேளாண் செயல் விளக்க திடல்களை பார்வையிட்டு தொழில்நுட்பங்கள் அறியலாம்

செங்கல்பட்டு, டிச.13

வேதிப்பொருட்களின் எச்சம் இல்லாத வேளாண் விளைப் பொருட்களை மக்களுக்கு விளைவித்து கொடுக்கும் உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் அடிப்படையில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற புதிய திட்டம் 2024 -25 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஒரு அங்கமாக விவசாயிகளிடையே இரசாயன இடுபொருட்களின் பயன்பாட்டை குறைத்து உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில், அனைத்து




வட்டாரத்திலும் நடப்பு பருவத்தில் மாதிரி உயிர்ம வேளாண் செயல் விளக்க திடல் நிறுவப்பட்டுள்ளது. செயல் விளக்க திடல் மூலம் விவசாயிகள் இயற்கை வேளாண்மையில் ஈடுபட ஊக்குவிக்கப்படுவார்கள்.

மேலும் அவர்களுக்கு உயிர்ம வேளாண்மையின் திட்டங்கள், சான்றிதழ் பெறும் முறைகள், உயிரியல் உள்ளீட்டு உற்பத்தி மற்றும் உயிரியல் விளைபொருட்களை சந்தைப்படுத்தல் குறித்து விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

எனவே உயிர்ம வேளாண்மையில் ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி மாதிரி உயிர்ம வேளாண் செயல் விளக்க திடல்களை பார்வையிட்டு உயிர்ம வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்து கொள்ளுமாறு செங்கல்பட்டு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பா.பிரேம்சாந்தி கேட்டுக்கொண்டார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 13.12.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 32 | 36 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 56 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 24 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 19 | 22 | 60 | கேரட் | 50 | 58 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 84 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 60 |
| 6 | புடலை | 36 | 40 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 40 | 44 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 40 | 46 | 66 | காளிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 338 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 28 | 70 | புருக்கோலின் | 160 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 58 | 64 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 55 | 61 | 72 | குடமிளகாய் | 50 | 54 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 66 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 60 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 55 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 80 | 85 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 55 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 22 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 38 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 42 | 46 | 97 | செவ்வாழை | 75 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 64 | 72 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 45 | 48 | | | | |
| 55A | துவரை | 60 | 65 | | | | |

# நெற்பயிரில் குலை நோய் மற்றும் பழநோயின் தாக்குதலைக் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, டிச.13

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது வானிலை மேக மூட்டமாகவும், காற்றில் ஈரப்பதம் அதிகமாகவும் இருப்பதனால் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற் பயிரில் குலைநோய் மற்றும் நெற்பழநோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்திட கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## குலைநோயின் அறிகுறிகள்

நாற்றங்காலில் தொடங்கி அனைத்து வளர்ச்சிப் பருவங் களிலும் குலைநோய் நெற்பயிரைத் தாக்குகிறது. இலைகளின் மேல் பழுப்பு நிறத்தில் சாம்பல் நிற மையப் பகுதியுடனும் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண்வடிவப் புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும்.

இந்நோய் தீவிரமாகத் தாக்கும்போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்றமளிப்பதால் குலைநோய் எனப்படுகிறது. நெற்பயிரின் கழுத்துப் பகுதியில் இந்நோய் தாக்கும் போது கறுப்பு நிறமாக மாறிக் கதிர்மணிகள் சுருங்கியும், கதிர்கள் உடைந்தும் தொங்கும். இந்நிலையில் இது கழுத்துக் குலை நோய்' எனப்படும். இந்நோய் நெற்பயிரின் கணுக்களில் தாக்கும் போது அவை கறுப்பு நிறமாக மாறி உடைந்துவிடும் நிலையானது 'கணுக்குலைநோய்' எனப்படும்.

## மேலாண்மை முறைகள்

குலைநோயைக் கட்டுப்படுத்திட விவசாயிகள் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். நோயற்ற பயிரிலிருந்து விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும். நடவு வயலில் நோயற்ற நாற்றுகளை நடவு செய்ய வேண்டும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

வயலிலும் வரப்பிலும் உள்ள களைகளை அகற்றிட வேண்டும். இந்நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்திட டிரைசைக் ளோசோல் 75 டபிள்யு.பி என்ற மருந்து 200 கிராம் அல்லது அசோஸ்க்சிட்ரோபின் 25 எஸ்.சி என்ற மருந்து 200 மி.லி இதில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

## நெற்பழ நோய்



நெற்பயிரினைத் தாக்கும் பழநோய், நெற்கதிர் மற்றும் மணிகளைத் தாக்கிச் சேதம் விளைவிக்கிறது. பாதிப்படைந்த நெல்மணிகள் மஞ்சள் நிறத்துடன் பழுத்துக் காணப்படும். முதிர்ச்சியடையாத மணிகள் உடைந்து காணப்படும். நெல்மணிகள் பதராகி அவற்றின் தரம் முற்றிலும் பாதிக்கப்படும். பழநோயினால் பாதிப்படைந்த வயல்களில் அறுவடைக்குப் பின் வைக்கோல் மற்றும் தாள்களை அழித்துவிட வேண்டும். இதனைக் கட்டுப்படுத்திட கதிர்பிடிக்கும் தருணம் மற்றும் 50 சதம் கதிர் வெளிவரும் தருணம் ஆகிய இரண்டு தருணங் களிலும் ஒரு ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 77 டபிள்யு.பி என்ற மருந்து 500 கிராம் அல்லது ஹெக்சாகனசோல் 5 இ.சி என்ற மருந்து 400 மி.லி இதில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு நெற்பயிரில் தோன்றும் குலைநோய் மற்றும் பழநோயினைக் கட்டுப்படுத்திடுமாறும், மேலும் கூடுதல் விவரங்களுக்குத் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகிடுமாறும் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நெற்பயிரில் முன்செய் விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள்

விவசாயிகள் பயிரிடுவதற்கு தாங்கள் சேமித்து வைத்த விதை அல்லது வேளாண்மைத் துறை மூலம் விற்பனை செய்யப்படும் விதைகளை வாங்கி நாற்றங்கால் தயாரிப்பதற்கு பயன்படுத்து வார்கள். அவற்றின் சேமிப்பு காலம், கால சூழ்நிலை மற்றும் பூச்சி, பூஞ்சாணங்களால் விதையின் முளைப்புத்திறன் மற்றும் அவற்றின் வீரியம் பாதிக்கப்படும்.




இவ்வாறு விதைகளுடன் கலந்து இருக்கும் தரமற்ற விதைகளை உப்பு நீர் கரைசலைப் பயன்படுத்தி தரமான வீரியமுள்ள விதைகளை பிரித்தெடுக்க முடியும்.

இதற்கு முதலில் 15 லிட்டர் கொள்ளளவு உள்ள பிளாஸ்டிக் வாளியில் 10 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் ஒரு நல்ல கோழி முட்டையை இடவேண்டும். முட்டை நல்ல எடை இருப்பதால் தண்ணீரில் மூழ்கிவிடும். பின்பு சமையலுக்கு பயன்படுத்தபடும் உப்பை நீரில் போட்டு கரைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நீரின் அடர்த்தி அதிகப்படும் அவ்வாறு நீரின் அடர்த்தி அதிகம் ஆகும்போது நீருக்கு அடியில் இருக்கும் முட்டை நீருக்கு மேல் மிதக்க ஆரம்பிக்கும். முட்டையின் மேற்பகுதி 25 பைசா அளவிற்கு தண்ணீரின் மேல் தெரியும்போது தண்ணீரில் உப்பு போடுவதை நிறுத்தி விடவேண்டும். சாரசரியாக 10 லிட்டர் தண்ணீருக்கு 1 முதல் 1 1/2 கிலோ உப்பு தேவைப்படும்.

மேற்கண்டவாறு தயாரிக்க உப்புக்கரைசலில் விதை நெல்லை சிறிது சிறிதாகப் போட வேண்டும். எடை குறைந்த மற்றும் பூச்சி தாக்கிய நெல் விதைகள் மேற்பகுதியில் மிதக்கும். அதே சமயம் எடை அதிகமான மற்றும் பூச்சி தாக்காத விதைகள் மூழ்கிவிடும். மிதக்கும் விதைகளை முற்றிலும் நீக்கிவிட வேண்டும். மூழ்கிய விதைகளை வெளியே எடுத்து இரண்டு அல்லது மூன்று முறை நீரில் கழுவி விதைகளின் மேற்பரப்பில் இருக்கும் உப்பை நீக்கிவிட வேண்டும். விதை கழுவிய பின் நிழலில் உலர்த்தி அதன் பின் நாற்றங்களில் விதைப்புக்கு பயன்படுத்தலாம்.

**நன்மைகள்**

- பூச்சி தாக்கிய விதைகள் மற்றும் பூச்சியின் முட்டைகள் அகற்றப்படும்.
- விதையின் மூலம் பரவும் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்த முடியும்.
- நன்கு வீரியம்மிக்க நாற்றுக்களை பெற முடியும்.

தகவல் : **த.ஈவேரா மற்றும் கோ.நெல்சன் நவமணிராஜ், விதை மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஒருங்கிணைந்த உர நிர்வாகம் - தகவல்



இன்றைய காலகட்டத்தில் சாகுபடி செலவிலே மிக அதிகமானதாக செலவாக இருப்பது பயிருக்கு தேவையான உர இடுதலுக்கான உரச்செலவு தான். அன்றைய காலகட்டத்தில் கிராமப்புறங்களில் எகப்பட்ட கால்நடை களும் உழவு மாடுகளும் இருந்தன. சித்திரை முதல் நாளேரு ஓட்டுவதிலிருந்து தொடர்ந்து உழவு பணி நடைபெற்றன. அதனாலே என்னவோ ' ஏழு உழவு போட்டால் எரு (உரம்) போட வேண்டியதில்லை ' என்ற பழமொழியும் உண்டு.

இன்றைய கால கட்டத்தில் கால்நடைகள் உழவு மாடுகள் அரிதாக உள்ளதால் முழுக்க முழுக்க இயந்திரங்களை கொண்டு (டிராக்டர், பவர்டில்லர்) போன்றவைகளை கொண்டு உழவு போட்டு வருகின்றனர். அவசரமாக ஓரிரு உழவு போட்டு முழுக்க முழுக்க இரசாயன உரங்களை நம்பி தான் பயிர் சாகுபடி செய்வதால் நிகர வருமானத்தில் 3/4 பங்கு உரத்திற்கான செலவாக உள்ளது என விவசாயிகள் புலம்பி வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இதை குறைக்கவும் ஒருங்கிணைந்த முறையில் உரமிடுவதை எப்படி கையாள வேண்டும் என்பதை குறித்து இந்த பதிவில் நாம் காண்போம்.

### மண் மாதிரி ஆய்வு

சாகுபடி செய்ய போகும் நிலத்தின் மண்ணை ஆய்வு செய்து அதற்கான உரப்பரிந்துரைபடி உரமிட வேண்டும். விவசாயிகள் ஓவ்வொருவரும் போட்டி போட்டு கொண்டு உர மூட்டைகளை (கிலோ கணக்கில் இடுவதற்கு பதிலாக) மூட்டை கணக்கில் இடுவதால் உரச் செலவும் அதிகமாகி விடுவதுடன் தேவையற்ற உரம் மண்வள த்தை கெடுத்தும் விடுகிறது.

### பயிருக்கு தேவையான உரங்கள் என்ன?

ஒரு பயிர் முழுமையாக வளர்ச்சி அடைவதற்கு அதற்கு கிட்டதட்ட 16 வகை ஊட்டசத்துகள் தேவை. இதில் எதாவது ஒன்றிரண்டு குறைந்தால்கூட பயிர் வளர்ச்சி தடைபட்டு மகசூல் குறைய வாய்ப்புள்ளது.

### முதல் நிலை சத்துகள்

கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் இவை மூன்றும் காற்று மற்றும் நீர்ப்பாசன மூலமாக பயிர்களுக்கு கிடைக்கிறது.

**பேரூட்ட சத்துகள் 3**

தழை சத்து (N), மணி சத்து (P), சாம்பல் சத்து (K)

இவை தான் பயிருக்கு முக்கியமாக தேவைபடுகிறது. இதை தான் விவசாயிகள் டிஏபி சூப்பர் பொட்டாஷ் போன்ற உரங்களை பரிந் துரைக்கபட்ட அளவுக்கு மேலே கடந்த 40 ஆண்டுகளாக அதிகமாக இடுவதால் அன்று அள்ளிக் கொடுத்த மண் இன்று மகசூலை கிள்ளிக் கொடுக்கிறது.

**இரண்டாம் நிலை சத்துகள்**

கால்சியம், மெக்னீசியம், சல்பர் இவைகளும் பயிர் வளர்ச்சிக்கு எண்ணெய் வித்து பயிர், காய்கறி பயிர், பயறு வகை பயிர்களுக்கு தேவையானது.

**நுண்ணூட்ட சத்துகள் (MICRO NUTRIENTS)**

மிக குறைந்த அளவில் இவை தேவைபட்டாலும் பயிரின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத சத்துகளாகும். துத்தநாகம் (ZN) இரும்பு (FE) தாமிரம் (CU) மாங்கனீஸ் (MN) போரான் (B) மாலிப்டினம் (MO) மற்றும் நிக்கல் (NI).

**சமச்சீர் உரமிடுதல் என்பது என்ன?**

பயிரின் வளர்ச்சிக்கேற்ப தேவையான அளவில் இயற்கை மற்றும் செயற்கை உரங்களை இடுவது தான் சமச்சீர் உரமிடு தலாகும். இதனால் சாகுபடியில் உரச்செலவை குறைக்க முடியும்.

**ஒருங்கிணைந்த உர நிர்வாக முறை எப்படி கையாளுவது**

1) மண் மாதிரி ஆய்வு படி உரமிடுதல்

2) மண்வளத்தை பேணிக்காக்க இயற்கையான உரங்களான மாட்டுசாணம் ஆட்டுகிடை அமர்த்துதல்.

3) உயிரியல் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டிரியா, பொட்டாஷ் பேக்டிரியா களை பயன்படுத்துதல்

4) கூட்டு உரங்களை (COMPLEX) பயன்படுத்திடுவதை தவிர்த்து தனிதனி (STRIGHTFERTILIZERS) பயன்படுத்திடல்

5) மண்ணில் இடுவதை காட்டிலும் இலைவழி தெளிப்பாக (FOLIAR SPRAY) செய்தல்

6) NONO FERTILIZERS (நானோ டிஏபி யூரியா) பயன் படுத்துதல்

7) அதிகமாக தழைசத்து உரத்தை பயன்படுத்தக்கூடாது.

8) மண்வளத்தையும் நுண்ணுயிர்களை பாதுகாக்கும் வகையில் உரங்களை பயன்படுத்திட வேண்டும்.

9) உரங்களை பாதுகாப்பாக இடவைப்பு முறையில் (PLACE MENT OF FERTILIZERS) வைப்பதால் உரங்கள் மிச்சபடும். தேவையற்ற விரயங்கள் தவிர்க்கப்படும்.

10) பசுந்தாள் தழை உரங்களை பயிரிட்டு மடக்கி உழவு செய்தல்

இதுபோன்ற செயல்களால் உரத்தை சிக்கனமாகவும் தேவைக் கேற்ப பயன்படுத்துவதால் வீண் விரயம் இன்றி மண்வளமும் (மணிபர்ஸ்-யும்) காக்கப்படும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# மதுரை வேளாண் கல்லூரியில் உலக மண் தின விழா



மதுரை, டிச.13

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக, உலக மண் தின விழா 5.12.24 ஆம் தேதி மண் மற்றும் சுற்றுச்சூழல் துறையிலும், வேளாண் அறிவியல் நிலையத்திலும் கொண்டாடப்பட்டது.

மண் மற்றும் சுற்றுப்புறச்சூழல் துறைத் தலைவர், முனைவர் P.கிறிஸ்டி நிர்மலா மேரி, மண் பராமரிப்பு, அளவிடுதல்,




கண்காணித்தல், பற்றி விவசாயிகளுக்கும் மாணவ மாணவிக ளுக்கும் எடுத்துரைத்தார். துறை பேராசிரியர் முனைவர் P.சரவணபாண்டியன், மண் (ம) நீர் சேகரிக்கும் முறைகளும் ஆய்வுகளை தெளிவாக எடுத்துரைத்தார். விழாவில் கலந்து கொண்ட இணைப்பேராசிரியர் முனைவர் சு.ஆ.ஜெயபால கிருஷ்ணன் அங்கக வேளாண் இடு பொருட்களின் பயன்கள் பற்றி உறையாற்றினார்.

மேலும் முனைவர் இரா.முருகராகவன் பல தரப்பட்ட மண் வகைகளும் பல்லுயிர் பெருக்கத்தினை பற்றி மிக சிறப்பாக கூறினர். இறுதியாக முனைவர் நிர்மலா, திட்ட ஒருங்கிணைப் பாளர் (பொறுப்பு) உழவர்களுக்கு மண்வள அட்டை வழங்கினார்.

மண்ணியல் துறை பேராசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர். முனைவர் து.பிரபாகரன், இணைப் பேராசிரியர் நன்றியுரை ஆற்றினார். இவ்விழாவில் மாணவ மாணவி களுக்கு, சைக்கிள் பேரணி, வண்ணக்கோலப் போட்டி மற்றும் வினாடி வினா போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடத்தப்பட்டது.


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
IS 4985 : 2021
CML-6400119610
IS 9537
ISO
9001
CERTIFIED
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# வாழைகன்றுக்கு மருந்தளித்தல் செயல்விளக்கமளித்த வேளாண்மைக் கல்லூரி மாணவிகள்

மதுரை, டிச.13



மதுரை மாவட்டம், மேலூர் வட்டாரம், விநாயகபுரத்தில் வாழைகன்றுக்கு மருந்தளித்தல் குறித்து செயல் விளக்கம் அளித்த கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தில் இளங்கலை வேளாண்மை இறுதி






ஆண்டு பயிலும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீ வில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் தயா ஹரிணி, சோபிகா, தங்க புஷ்பம், சயனா. க.சலீம், சந்தியா பூரணி, சூர்யா, மாரிசெல்வி, கிருஷ்ணவேணி, சுஷ்மா ஆகியோர் நேர்த்தியான கன்றுகள் தேர்ந்தெடுப்பது, கிழங்குகளுக்குக் கார்போப்யூரன் மருந்தளிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் முனைவர்.ம.ஜெயந்தி குழு ஆலோசகர் முனைவர் ஜெ.ஜெயபிரபா ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மானாவாரி எள் விதைப்பில் மாங்கனீஸ் சல்பேட் இடுதல் குறித்த தகவல்

விருதுநகர், டிச.14

சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி மற்றும் நரிக்குடி வட்டாரத்தில் தற்போதைய தொடர் மழையால் எள் விதைப்பு வேகமாக நடைபெற்று வருகிறது. எள் சாகுபடி செய்த நாலூர் விளக்கு பரிமளா, பிரியா, நதியா மற்றும் பணக்குடி கணேசன் உள்ளிட்ட விவசாயிகளுக்கு எள் சாகுபடியில் ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட் நுண்ணூட்ட உரமாக இடுவது குறித்து கூறப்பட்டது.

இது குறித்து வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் கூறுகையில், எள் எண்ணெய் வித்து பயிரில் நிலக்கடலைக்கு அடுத்தப்படியாக உள்ளது. ஒரு சதுர மீட்டருக்கு 11 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க பட வேண்டும் என்றார் குறைந்த செலவில் அதிக மகசூல் எடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறினார். ஒரு சில இடங்களில் நெல் பரியும் தருவாயில் உள்ளதால் அதற்கு அம்மோனியம் சல்பேட் / அம்மோனியம் குளோரைடு ஏக்கருக்கு 20 கிலோ இடப் பரிந்துரைக்கப்பட்டது.

அக்ரி க்ளினிக்-யின் செயல்பாடுகளை தீவிரப்படுத்தும் வித மாகமாகவும் விவசாயிகளின் வருகை அதிகப்படுத்தும் விதமாக பல்வேறு செயல் திட்டங்களை நிர்வாக இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ, ஆலோசனையின்படி விவ சாயிகள் வருகை பதிவேடு, வாட்சாப் குழுக்கள் பயிர் வாரியாக அமைத்தல் தகவல் பலகை மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரம் குறித்து முக்கிய கிராமங்களில் பிளெக்ஸ் பேனர் வைப்பது குறித்தும் துண்டு பிரசுரங்கள் விவசாயிகளிடம் வழங் குதல் போன்ற செயல்பாடுகளை ஓரிரு நாளில் செயல்படுத்த படும் என செயல் அலுவலர் பார்த்த சாரதி தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான அனைத்து இடுபொருட்களும் (விதை, உரம், பூச்சி மருந்து, நுண்ணூட்ட சத்து) குறைந்த விலையில் அக்ரி கிளினிக்கல் கிடைப்பதாகவும் விவசாயிகள் வாங்கி பயன்படுத்திட கேட்டுக்கொண்டார். ஆதிதிராவிட விவசாயி களுக்கு மானிய விலையில் பவர்டில்லர் வாங்கிட அய்யப்பன் கல்யாணிபுரம் பரிந்துரைக்கப்பட்டது.

நிலக்கடலை விதைப்பான் கருவி மூலமாக நிலக்கடலை விதைப்பு செய்வதால் உண்டாகும் நன்மைகளை பற்றி எடுத்துக்கூறினார். நிலக்கடலை விதைப்பான் குறைந்த வாடகையில் அக்ரி க்ளினிக் உள்ளது. அதனை வாடகைக்கு வாங்கி நிலக்கடலை சரியான இடைவெளியில் குறிப்பிட்ட ஆழத்தில் விதைத்து சதுரமீட்டருக்கு 33 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க லாம். பயிர் எண்ணிக்கை சரியாக இருந்தால் தான் எதிர்பார்த்த மகசூல் கிடைக்குமென வேளாண் வல்லுநர் தெரிவித்தார்.

தற்போதைய மழை பெய்து வருவதால் மரக்கன்றுகள் (மகாகனி, காயா, மகாகனி, தேக்கு, செம்மரம், செந் சந்தனமரம், நீர் மருது, வேம்பு, மலை வேம்பு ) போன்ற மரக்கன்றுகள் இருப்பில் உள்ளதால் வாங்கி நட இதுவே சிறந்த தருணமாகும் என்றார். இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகளை கள பணியாளர் பரதன், பிரியா சிறப்பாக செய்திருந்தனர்.

# தேயிலையில் இப்கோ நானோ உரங்கள் – ஓர் பார்வை

INDCOSERVE, தேயிலை கூட்டுறவு நிறுவனம், நீலகிரியில் நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், INDCOSERVE, மேலாண்மை இயக்குனர் வினித் தலைமை வகித்தார். இப்கோ மாநில விற்பனை மேலாளர், ந.சுரேஷ்/ தேயிலையில் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, சாகரிகா திரவ உரங்களை இலைவழி தெளிக்கும் நேரம், அளவு மற்றும் முறைகள் பற்றி விளக்கினார்.



தேயிலையில் நானோ உரங்கள் தெளிப்பதால் உர செலவு குறைந்து மகசூல் அதிகரிக்கும் என்றார். நானோ உரங்கள் பயன்படுத்துவதால் இரசாயன உரங்களின் பயன்பாட்டால் ஏற்படும் மண் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை தவிர்க்கலாம் என்று தெரிவித்தார்.

மேலும், நானோ உரங்களுன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தேயிலை கூட்டுறவு நிறுவன அதிகாரிகள் பங்கேற்றனர்.

- ADVT.






**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பாலாறு வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கு உயிரியல் முறை பயிர்ப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி



வேலூர், டிச.13

வேலூர் மாவட்டம், கொத்தமாரிக்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் மாணவர்களுக்கு 'உயிரியல் முறை பயிர்ப் பாதுகாப்பு' குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி 13.12.24 அன்று நடத்தப்பட்டது. இதில், பயிர்களை ரசாயனங்களை தவிர்த்து இயற்கை முறைகளின் மூலம் எப்படி பாதுகாக்கலாம் என்பதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியின் முக்கியமான அம்சமாக, தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் கு.விக்னேஷ், நுண்ணுயிர் பூச்சிகள், உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயற்கை உரங்கள் பயன்படுத்தி பசுமையான பண்ணை யமைப்பை உருவாக்குவது பற்றிய விரிவுரை அளித்தார். பின்னர் பேசிய வேளாண் நுண்ணுயிரியல் துறை உதவிப் பேராசிரியை, முனைவர் N.மீனா, மாணவர்களுக்கு விவசாயத்தின் நீண்ட காலத்திற்கான பயன்கள் மற்றும் இயற்கை விவசாயத்தின் அவசியம் குறித்து விளக்கினார்.

'உயிரியல் முறைகளை பயன்படுத்துவதன் மூலம் நமக்கான உணவுப் பாதுகாப்பை மேம்படுத்த முடியும். அது மட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இது பெரிதும் உதவும்' என அவர் குறிப்பிட்டார். மாணவர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பி, உயிரியல் முறைகள் தொடர்பான அவர்களுடைய சந்தேகங்களுக்கு நேரடியாக பதில்களை பெற்றனர். மேலும், பயிற்சியின் ஒரு பகுதியாக, உயிரியல் முறையில் பயிர்களை பாதுகாக்க பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் கலவைகளை நேரடியாக காட்டும் செயல்முறை அறிமுகம் ஏற்படுத்தப் பட்டது. பின்னர்மாணவர்களுக்கு நுண்ணுயிர் பூச்சிகள், உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயற்கை உரங்கள் தயாரிப்பு முறைகள் பற்றிய செயல் விளக்கப் பயிற்சியை தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியை கோ.அர்சா மற்றும் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் லு.செல்வம் அளித்தனர். இத்தகைய பயிற்சிகள் விவசாயத்தின் பருவ-நிலை மாற்றத்துக்கு ஏற்ப புதிய தீர்வுகளை அறிய முக்கியமானதாகும். கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதனை ஒரு சிறந்த கற்றல் அனுபவமாகக் கருதினர். மாணவர்களின் விடய நுணுக்கத்தையும் ஆர்வத்தையும் பார்த்து, கல்லூரியின் நிர்வாகம் எதிர்காலத்தில் இதுபோன்ற மேலும் பல நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சன்ன இரக நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய பண்ணைப்பள்ளி பயிற்சி



சிவகங்கை, டிச.13

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டாரம் (அட்மா) விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம் ந.சண்முகஜெயந்தி தலைமையில் சன்ன இரக நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய பண்ணைப்பள்ளி பயிற்சி எழுவன்கோட்டை கிராமத்தில் 11.12.24 அன்று நடத்தப்பட்டது.

எழுவன்கோட்டை கிராமத்தில் சரவணன் என்பவரது 1 எக்டர் நிலத்தில் செயல்விளக்கத்திடல் அமைத்து பண்ணைப்பள்ளி பயிற்சி தகுந்த இடைவெளியில் நடத்தப்பட்டு வருகிறது. 11.12.24 அன்று நெற்பயிரில் ஒருங்கிணைந்த முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றிய பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு தலைமை யேற்ற மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ந.சண்முக ஜெயந்தி உரையாற்றுகையில் நெற்பயிரிலுள்ள நன்மைசெய்யும் பூச்சிகளை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த முறையில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த அறிவுறுத்தி ஊதா வண்ண அட்டை, விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப்பொறி மற்றும் வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தும்முறை மற்றும் நன்மைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்து சாகுபடி செலவை குறைக்க அறிவுறுத்தினார்கள்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண்மை உதவி இயக்குநர் கமலாதேவி மூலம் உயிர்உரங்கள் மற்றும் நெல் நுண்ணுரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், உழவர் பயிற்சி நிலையத்திலிருந்து வருகைபுரிந்த வேளாண்மை அலுவலர் வீரையா தனது உரையில் இலை வண்ண அட்டை பயன்படுத்தவது பற்றி விரிவாக எடுத் துரைத்தார். மேலும் இலை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து உரங்களை சீராக பயன்படுத்துவதால் உரச்செலவை மிச்சப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் பூச்சி தாக்குதல்களை தவிர்க்கலா மென்று கூறினார்.

சேதுபாஸ்கரா வேளாண்மை கல்லூரியிலிருந்து வருகை புரிந்த உழவியல் துறை பேராசிரியர் முனைவர் குமரவேல் தற்போது நிலவிவரும் சூழலில் இலை சுருட்டுப்புழு நெற்பயிரை அதிகம் தாக்கி வருகிறது. இதன் அறிகுறிகள் இலைகள் நீள்வாக்கில் மடிக்கப்பட்டிருக்கும். புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டி உண்பதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும். இதனை கட்டுப்படுத்த டிரைக்கோகிரோம முட்டை ஒட்டுண்ணி பயன்படுத்தலாம். வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிகிதம் அல்லது வேப்பெண்ணை 3 சதவிகிதம் தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும் நெற்பயிரில் குருத்து காய்தல் மற்றும் வெண்கதிர் அறிகுறிகள் தண்டுத்துளைப்பான் மூலம் ஏற்படுகிறது. தண்டுத்துளைப்பான் வராமல் தடுப்பதற்கு முட்டை ஒட்டுண்ணி (டிரைக்கோகிரமா ஜப்பானிக்கம்) ஏக்கருக்கு 2 சி.சி வீதம் ஒரு வார இடைவெளியில் மூன்று முறை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். மேலும் ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சிபொறி பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். சூரிய விளக்குப்பொறி மூலமும் தண்டுத்துளைப்பான் அந்துப்பூச்சியை கவர்ந்து கட்டுப்படுத்தலாம் என்று விரிவாக தனது உரையில் எடுத்துரைத்தார்.

மேலும் சேதுபாஸ்கரா வேளாண்மை கல்லூரியிலிருந்து வருகை புரிந்த பயிர் நோயியல் துறை பேராசிரியர் முனைவர் ரெத்தினகுமார் புகையான் தாக்கப்பட்ட நெற்பயிர்கள் முற்றிலும் காய்ந்து தீய்ந்த மாதிரி காட்சியளிக்கும். புகையான் வர காரணமான பழுப்பு தத்துப்புச்சியானது புல்தழை குட்டை நோய், காய்ந்த குட்டை நோய் மற்றும் வாடிய குட்டை நோய் ஆகியவற்றை பரப்புகிறது. இதனை கட்டுப்படுத்த தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களை பயன்படுத்துதல் மற்றும் அதிக தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும்.

வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிகிதம் அல்லது வேப்பெண்ணை 3 சதவிகிதம் தெளித்து கட்டுப்படுத்தலாம். சூரிய விளக்குப்பொறி மற்றும் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி பயன்படுத்தியும் புகையானை கட்டுப்படுத்தலாம். குலைநோயை கட்டுப்படுத்த ட்ரைசைக்ளோசோல் பூஞ்சாண கொல்லியை பயன்படுத்த அறிவுறுத்தினார்கள்.

அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்களான தமிழ்ச் செல்வி எஸ்தர், குருதாஸ் மற்றும் அர்ச்சனா ஆகியோர் இந்நிகழ்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். எழுவன்கோட்டை கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட 25 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். வருகை புரிந்த அனைத்து விவசாயிகளுக்கும் மதிய உணவு மற்றும் ஐஊஆ முவை வழங்கப்பட்டன.

# நிலக்கடலை விளைச்சலை அதிகரிக்க ஜிப்சம் வேளாண் துறை தகவல்

கள்ளக்குறிச்சி, டிச.13

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை பயிர்கள் தற்போது பூக்கும் தருணத்தில் காணப்படுகிறது. தற்சமயம் நிலக்கடலை பயிருக்கு கந்தகம் மற்றும் சுண்ணாம்பு சத்து நிறந்த ஜிப்சம் இடுவதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம்.

நிலக்கடலையில் கந்தக சத்தானது பயிரின் வளர்ச்சிதை மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. நிலக்கடலையில் அமினோ அமிலம் மற்றும் புரத உற்பத்திக்கும், எண்ணெய் அளவு அதிகரிக்கவும் கந்தகம் மிக மிக அவசியம். மேலும் தழைச்சத்து உபயோகிப்புத் திறனையும் அதிகரிக் கின்றது. சுண்ணாம்புச் சத்தானது கடலை விதை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடலை விழுதுகள் மண்ணில் இறங்கிய உடன் இளம் காய்களால் நேரடியாக சுண்ணாம்புச் சத்து எடுத்துக் கொள்ளப்படு கின்றது. இலை, தண்டு, விழுது மற்றும் வேரின் உறுதி தன்மைக்கு மிக அவசியம். காய்களில் விதை பருப்புகள் முழுமையாக உருவாக கால்சியம் துணைபுரிகிறது. சுண்ணாம்புச் சத்து குறை பாட்டால் பொக்குக் கடலைகள் உருவாகின்றது. 75 சதவீத கந்தகம் மற்றும் சுண்ணாம்புச் சத்து விழுதுகள் மற்றும் கடலைக் காய்களால் நேரடியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. மானாவாரி நிலக்கடலை சாகுபடியைப் பொருத்த மட்டில் ஜிப்சத்தை பிரித்து இடுவது சிறந்தது. மேலும் ஜிப்சத்தை இடும்போது மண்ணில் ஈரம் இருப்பது மிகவும் அவசியமாகும். மழை நீர் கிடைத்தால் உடனே கரைந்து பயிருக்குக் கிட்டும் வகையில் மாறிவிடும். அதே நேரத்தில் அதிக அளவு மழை பெய்தாலும் கரைந்து வீணாகிவிடும். இதைத் தவிர்க்கவும் கந்தகச்சத்து பயிருக்கு சரியான நேரத்தில் கிடைக்கச் செய்யவும் எக்டருக்கு 400 கிலோ ஜிப்சத்தைப் பிரித்து இடவேண்டும்.

அதாவது 200 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக விதைப்பதற்கு முன்னரும் மீதமுள்ள 200 கிலோவைப் பயிர் பூக்கத் தொடங்கும் போது அதாவது விதைத்த 30-45 நாட்களுக்குள் மழை வந்தவுடன் மேலுரமாக இட்டுமண் அணைக்க வேண்டும். இவ்வாறு பிரித்து இடும்போது அடியுரமாக இட்டது விதை எளிதாக முளைத்து வரவும், ஆரம்ப காலத்தில் செடி வளர்வதற்குத் தேவையான கந்தகம் மற்றும் சுண்ணாம்புச் சத்தையும் அளிக்கிறது. மேலுரம் இடுவது விழுதுகள் இறங்குவதற்கு ஏதுவாகவும், திரட்சியான பருப்புகள் உருவாவதற்கும், எண்ணெய்ச்சத்தை அதிகரிக்கவும் வழிவகை செய்கிறது. எனவே விவசாயிகள் ஒரு எக்டருக்கு 400 கிலோ ஜிப்சத்தை இரண்டாக பிரித்து அடியுரம் மற்றும் மேலுரமாக இட்டு மண் அணைத்து அதிக விளைச்சலை பெறுமாறு கள்ளக்குறிச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சத்தியமூர்த்தி விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார்.